


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (20.3.2026) மாலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதையொட்டி, தர்மபுரி, சேலம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாகப் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

# தி.மு.க. வேட்பாளர்கள் நேர்காணல்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்குப் போட்டியிட விரும்பி தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பம் செலுத்தியவர்களை கழகத் தலைவர் அவர்கள் 17–03–2026 முதல் 23–03–2026ஆம் தேதி வரை, பின்வரும் மாவட்ட வாரியாக சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேர்காணல் வாயிலாகச் சந்தித்து தொகுதி நிலவரம் வெற்றி வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து அறிந்திட இருக்கிறார்கள்.

குறிப்பிட்டுள்ள தேதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர் மட்டும் வரவேண்டும். மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர, பகுதிக் கழகச் செயலாளர்கள் வரவேண்டிய அவசியமில்லை. வேட்பாளர்கள் தங்களுக்கான ஆதரவாளர்களையோ, பரிந்துரை யாளர்களையோ அழைத்து வரக்கூடாது என்றும், அவர்களையும் ‘அவர்களுக்காக விருப்ப மனு’ செலுத்தியோரையும் நேர்காணலுக்கு கண்டிப்பாக அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### மாவட்ட வாரியாக நேர்காணல் நடைபெறும் நாள் விவரம்

| நாள் – கிழமை | நேரம் | மாவட்டம் |
|---|---|---|
| மார்ச் 22 ஞாயிறு | காலை 9.00 மணி | கடலூர் கிழக்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் தெற்கு, காஞ்சிபுரம் தெற்கு. |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை கிழக்கு |
| மார்ச் 23 திங்கள் | காலை 9.00 மணி | திருச்சி வடக்கு, திருச்சி மத்திய,திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, பெரம்பலூர், அரியலூர் |
| மார்ச் 23 திங்கள் | மாலை 4.00 மணி | புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை நாகப்பட்டினம், திருவாரூர் |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

### தமிழ்நாட்டின் திராவிட மாடல் நாடு முழுவதும் பின்பற்றப்பட்டால்

# இந்தியா இன்னும் விரைவாக வளர்வது உறுதி!

### குறைவான மகப்பேறு இறப்பு விகிதத்தை அறிய தமிழ்நாடு வந்துள்ள உத்தரப்பிரதேச அதிகாரிகளை மேற்கோள்காட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

**சென்னை, மார்ச் 22-**

**மகப்பேறு இறப்பு விகிதத்தை குறைக்க தீர்வு காண்பது தொடர்பாக தமிழ்நாடு அதிகாரிகளுடன் விவாதிக்க உத்தரப்பிரதேச திட்டக்குழுவினர் சென்னை வந்துள்ளனர்.**

**இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் ‘தமிழ் நாட்டின் திராவிட மாடல்’ நாடு முழுவதும் பின்பற் றப்பட்டால், இந்தியா இன்னும் விரைவாக வளர்வது உறுதி’ என்று பதிவிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளும் இந்த ஆரோக்கியமான போக்கு மென்மேலும் வளர வேண்டும் என விழைகிறேன். தமிழ்நாட் டுக்கு வந்துள்ள விருந்தினர்களை நம் மக்களின் சார்பாக அன்போடு வரவேற்கிறேன்.

மகப்பேறு இறப்பு விகிதம் குறைப்பதில் மட்டு மல்ல; மாநில சுயாட்சி, மொழிக்கொள்கை, சமூக நீதி ஆகியவற்றிலும் தமிழ்நாட்டின் Dravidian Model நாடு முழுவதும் பின்பற்றப்பட்டால் இந்தியா இன்னும் விரைவாக வளர்வது உறுதி!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




---

# தனி மனித வாழ்வைச் செம்மைப்படுத்தும் ரமலான் நோன்பு!

### இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் வாழ்த்து!

திருச்சி, மார்ச் 22-

தனி மனித வாழ்வை செம்மைப்படுத்தும் ரமலான் நோன்பு என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வாழ்த்து தெரிவித்தார்.

இது குறித்து அவரது வாழ்த்து செய்தி வருமாறு:

ரமலான் நோன்புப் பெருநாள் வாழ்த்துகள் அனைவருக்கும் உரித்தாகும்.

இஸ்லாமிய மார்க்கக் கடமையில் ஒன்றான நோன்பு, தனிமனித வாழ்வைச் செம்மைப்படுத்துவதோடு, நோன்பு மாதத்தில் ஏழைகளுக்குப் பங்கிட்டு



அளிக்கும் கொடைகள் மூலம் சமுதாயத்தில் ஏழ்மை நீங்கி, அனைவரும் வளமோடு வாழ்வதற்கான வழியையும் திறந்து விடுகிறது என்பதைப் பார்க்கிறோம்.

முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நாடும் ஏடும் நானிலமும் போற்றும் திராவிட மாடல் நல்லாட்சியில் அனைத்து சமுதாய மக்களும் நோன்பை மதித்துப் போற்றி வருவதைப் பார்க்கும்போது, எல்லாரையும் மனதால் இணைக்கும் இந்தத் திராவிட மாடல் நல்லாட்சி எங்கணும் பரவ வேண்டும் என்று பிரார்த்திக்கக் கடமைப்பட்டவர்களாகி விடுகிறோம்.

‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’, ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’, ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ (உறவினர்) ‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்’ என்னும் உன்னதக் கொள்கைகளை நிலைநிறுத்தும் ரமலான் நோன்புத் திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்துகள். எல்லாமும் எல்லாரும் பெற்று இனிதாக வாழ்ந்திட வாழ்த்துவோம்.

இவ்வாறு அவர் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கீரை ஆ. தமிழ்ச்செல்வன்
### மார்ச் 22 (1997)



புதுக்கோட்டை மாவட்டக் கழக துணைச் செயலாளராகவும் – குன்றாண்டார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

மாவட்ட ஊராட்சி துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“கடுமையான சோதனைகள், கொடிய அடக்குமுறைகள், கழகத்தை தாக்கியபோதெல்லாம் அந்தக் கழகக் காளை நெஞ்சுயர்த்தி நிமிர்ந்து நின்று இந்த இயக்கத்தைக் காத்து நின்ற காட்சியை எண்ணிப் பார்க்கிறேன். தனது கனிவான நடைமுறையினால் கழக உடன்பிறப்புக்களைக் கவர்ந்து நின்ற பாங்கினை நினைத்துப் பார்க்கிறேன்” என தலைவர் கலைஞர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# மேற்கு வங்கத்தில் பொதுப்பிரிவு பெண்களுக்கு உதவித்தொகை ரூ.1500ஆக உயர்வு!

### திரிணாமுல் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் உறுதிமொழி!

கொல்கத்தா, மார்ச் 22 -

மேற்குவங்கத்தில் கடந்த 15 ஆண்டுகளாக முதல்வராக இருக்கும் மம்தா பானர்ஜி, தொடர்ந்து 4வது முறையாக வெற்றி பெறுவதற்கான பிரச்சாரத்தை தொடங்கி உள்ளார். அதன் முதற்கட்டமாக அவரது திரிணாமுல் காங்கிரஸ் கட்சி சார்பில் 10 உறுதிமொழிகள் கொண்ட தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

அதில் கூறியிருப்பதாவது:

★ பெண்களுக்கு நல உதவி வழங்கும் லட்சுமிர பந்தர் திட்ட மாத நிதி ரூ.500 உயர்த்தப்படுகிறது. இதன் மூலம் எஸ்சி, எஸ்டி பெண்களுக்கு மாத உதவித்தொகை ரூ.1,700 ஆகவும், பொதுப் பிரிவுப் பெண்களுக்கு ரூ.1,500 ஆகவும் உயர்கிறது.

★ வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்துதல், சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்துதல் மற்றும் சுய உதவிக் குழுக்களின் அமைப்பில் கடன் புழக்கத்தை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் பெண்களின் தொழிலாளர் பங்களிப்பை 44.7 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தப்படும்.

★ கர்மாஞ்சலி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதிகள், காவல் படையில் பெண் பணியாளர்களின் சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் ‘ரத்திரேர் சாத்தி’ மொபைல் செயலி மூலம் வலுவான பாதுகாப்பு வழிமுறைகள் உருவாக்கப்படும்.

★ கொல்கத்தாவின் முக்கிய சந்திப்புகளில் பெண் காவல்துறை அதிகாரிகளால் நடத்தப்படும் ‘பிங்க் பூத்கள்’ மற்றும் முக்கிய சாலைகளில் முழுக்க முழுக்க பெண்களைக் கொண்ட இரவு ரோந்துக் குழுக்கள் அமைக்கப்படும்.

★ வக்பு சொத்துக்களைப் பாதுகாத்து சமூக நலனுக்காகப் பயன்படுத்துதல்; ஆலியா பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு சார்ந்த படிப்புகளை விரிவுபடுத்துதல்; சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் உள்ள 27 தொழிற் பயிற்சி நிறுவனங்களில் மென்திறன் பயிற்சிகள் அறிமுகப்படுத்தப்படும்.

★ யோக்யஸ்ரீ பயிற்சித் திட்டத்தை வலுப்படுத்துவதன் மூலமும், எஸ்சி, எஸ்டி, ஓபிசி மாணவர்களுக்கு 100 சதவீத கல்வி உதவித்தொகை வழங்கப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் எஸ்சி, எஸ்டி மாணவர் விடுதி விரிவுபடுத்தப்படும்.

★ மஹதோ மற்றும் கிசான் சமூகத்தினருக்குப் பட்டியல் பழங்குடியினர் எஸ்டி அந்தஸ்தைப் பெற்றுத் தருவதற்கான முயற்சி தீவிரப்படுத்தப்படும். பழங்குடியின சுயஉதவிக் குழுக்களுக்கு ஆதரவளிக்கவும், நிதிசார் உள்ளடக்கத்தை மேம்படுத்தவும் பெரிய பகுதி பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கப்படும்.

★ மேற்குவங்கத்தின் ஒவ்வொரு வட்டாரத்திலும் சுகாதார முகாம்கள் தொடங்கப்படும். துவாரே சிகித்சா முகாம்கள் மூலம், மக்கள் தங்கள் வீட்டு வாசலிலேயே தரமான சுகாதார சேவைகளைப் பெறுவார்கள்.

★ பங்களார் யுவசாத்தி திட்டத்தின் மூலம் வேலையற்ற இளைஞர்களுக்கு மாதம் ரூ.1,500 வழங்கப்படும்.

★ மேற்குவங்கத்தில் விவசாயச் சூழலை வலுப்படுத்தவும், விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கு ஆதரவளிக்கவும் ரூ.30,000 கோடி சிறப்பு வேளாண் பட்ஜெட் அறிவிக்கப்படும்.

★ மேற்குவங்கத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு உறுதியான வீடும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியும் வழங்கப்படும்.

★ பங்களார் சிக்ஷாய தானா திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் ஒரு பெரிய உள்கட்டமைப்பு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

★ உலகத்தரம் வாய்ந்த தளவாடங்கள், துறை முகங்கள் மற்றும் வர்த்தக உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் மேற்கு வங்கத்தை கிழக்கு இந்தியாவின் வர்த்தக மையமாக மாற்றப்படும்.

★ தகுதியுள்ள அனைத்து முதிய குடிமக்களையும் உள்ளடக்கும் வகையில் படிப்படியாக நலத்திட்டங்கள் விரிவுபடுத்தப்படும்.

★ மேற்குவங்கத்தில் புதிதாக 7 மாவட்டங்கள் உருவாக்கப்படும். மேலும் நகராட்சிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

